இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 01-08-2024

# போதை இல்லாத குஜராத்

**“போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்” என்று பிரதமர் மோடி பேசி இருக்கிறார். போதைப் பொருள் இல்லாத குஜராத்தை அவர் முதலில் உருவாக்க வேண்டும். அங்கிருந்துதான் அதிகமான போதைப் பொருள்கள் வெளியில் வருகின்றன என்பது பிரதமருக்குத் தெரியாதா?**

வானொலியில் மாதம்தோறும் ‘மனதின் குரல்’ என்ற நிகழ்ச்சி மூலமாகப் பேசி வருகிறார் பிரதமர். கடந்த 28 ஆம் தேதியன்று பேசும் போது, நாட்டில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவ தாக கவலை தெரிவித்துள்ளார் பிரதமர். போதைப் பொருள் பிரச்சினை தொடர்பாக மக்களுக்கு ஆலோசனைகள் சொல்ல, ‘மனஸ்’ என்ற உதவி மையம் தொடங்கப்படுவதாக அறிவித்துள்ளார் பிரதமர்.

“போதைப் பொருட்களின் பிடியில் தங்கள் குழந்தைகள் சிக்கி விடு வார்களோ என ஒவ்வொரு குடும்பமும் கவலையில் உள்ளது. எனவே இந்தியாவைப் போதைப் பொருட்கள் இல்லா நாடாக உருவாக்க ஒவ்வொரு தனிநபரும் நிறுவனங்களும் அனைத்து அமைப்புகளும் உழைக்க வேண்டும். போதைப் பொருட்கள் இல்லா இந்தியாவை உருவாக்க ‘மனஸ்’ உதவி மையத்தை பயன்படுத்துமாறு மக்கள் அனைவரையும் அனைத்து குடும்பங்களையும், அனைத்து நிறுவ னங்களையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று பிரதமர் பேசி இருக்கிறார். அவரது முன்னெடுப்பு சரியானதுதான். இதனை முதலில் அவர் குஜ ராத்துக்கும் குஜராத் மாநில அரசுக்கும்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் போதைப் பொருள் கிடங்காக இருப்பது குஜராத் மாநிலம் தான். தடுப்புப் பணிகளை முதலில் அங்கிருந்துதான் தொடங்க வேண்டும்.

**இன்னும் சொன்னால் நாட்டிலேயே அதிகமான போதைப் பொருள் விற்பனையாகும் மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள்தான் என்கிறது ஒரு புள்ளிவிபரம். கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி மாநிலங்களவையில் வைக்கப்பட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் ராஜஸ்தானில்தான் அதிகமான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது பா.ஜ.க. ஆளும் மாநிலம் ஆகும்.**

**ராஜஸ்தான், பஞ்சாப், மத்தியப்பிரதேசம், ஜார்கண்ட், மணிப்பூர், குஜராத், அரியானா, பீகார், மேற்கு வங்கம், உத்திரப்பிரதேசம் ஆகிய பத்து மாநிலங்களில்தான் அதிகமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஏழு மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும், ஆளும் கூட்டணியில் இருக்கும் மாநிலங்கள். இந்த மாநிலங்களில் இருந்து தனது போதை ஒழிப்பை பிரதமர் தொடங்க வேண்டும்.**

இந்தியாவில் போதைப் பொருள் கடத்தலின் தலைநகராக இருப்பது குஜராத் மாநிலம்தான் என்பதை அங்கிருந்து வரும் செய்திகள் தொடர்ந்து மெய்ப்பித்துக் கொண்டிருக் கின்றன.ஹெராயினுக்கு முக் கிய மூலப்பொருளாக ஓபியம் உள்ளது. உலகின் மிகப்பெரிய ஓபியம் உற்பத்தியாளர் களால் ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு குஜராத் வழியாக வருகிறது. ஆப்கானிஸ்தானில் தயாராகும் ஹெராயின்கள், இந்தியப் பெருங்கடல் வழியாக கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்காவுக்குக் கடத்தப்படுவதாக ஐ.நா.வின் போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகம் கூறுகிறது. 2017 - 21 ஆகிய ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.2.5 லட்சம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் குஜராத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

* குஜராத் மாநில கடற்பகுதியில், ஒரு கப்பலில் இருந்து 1,500 கிலோ ஹெராயினை இந்திய கடலோரக் காவல் படை அதிகாரிகள் 2017 ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். இந்த ஹெராயின் மதிப்பு கிட்டத்தட்ட 550 மில்லியன் டாலர் இருக்கும் என கடலோரக் காவல்படை அறிக்கையே வெளியிட்டது. “இவ்வளவு போதைப் பொருள்கள் ஒரே நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறை” என்று கடற்படை செய்தி தொடர்பாளர் டி.கே.சர்மா சொன்னார்.

* 2021 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள முந்திரா துறைமுகத்துக்கு ரூ.21 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருள் வந்து இறங்கியது.

* 2022 ஆம் ஆண்டு கஞ்சா, மெத்தாம்பிடமைன் மற்றும் ஹெரா யின் போன்ற போதைப் பொருட்கள் 760 கிலோ கண்டுபிடிக்கப் பட்டன. இதன் சர்வதேச மார்க்கெட் விலை ரூ.2,000 கோடி.

* 2022,23 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் குஜராத்தில் உள்ள 25 மாவட்டங்களில் இருந்து ரூ.4 ஆயிரம் கோடிக்கும் அதிகமான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்திருப்பதாக அந்த மாநில அரசே சொல்லி இருக்கிறது.

* கடந்த பிப்ரவரி மாதம் குஜராத்தில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பி லான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 3,300 கிலோ எடை கொண்ட போதைப் பொருட்கள் இவை. ஐந்து பேரைக் கைது செய்தது காவல்துறை. இவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்து போதைப் பொருள் விற்கும் அளவுக்கு ‘பாதுகாப்பான’ மாநிலமாக குஜராத் இருக்கிறது.

**குஜராத் போலீஸ் அதிகாரி ஒருவர் அளித்துள்ள பேட்டியில், “போதைப் பொருட்கள் குஜராத் வந்ததும் டெல்லி, பஞ்சாப் மாநிலத்துக்கு கடத்தப் படுகிறது. குஜராத்தில் இருந்து ரயில், பேருந்து,கார் மூலம் கடத்தப்படு கிறது” என்று சொல்லி இருக்கிறார். குஜராத்துக்கு போதைப் பொருள் வரும் பாதையையும், அங்கிருந்து வெளியில் அனுப்பி வைக்கப்படும் பாதையையும் முதலில் அடையுங்கள். போதைத் தடுப்பின் முதல் நடவடிக் கையாக அது அமையட்டும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.7.2024) தலைமைச் செயலகத்தில், CREDAI தெற்கு மண்டல துணைத் தலைவர் எஸ்.ஸ்ரீதர், CREDAI தமிழ்நாடு தலைவர் ஆர். இளங்கோவன், துணைத் தலைவர் மேடன் பி. லூண்ட், செயலாளர் பி. ரவிச்சந்திரன், பொருளாளர் வி. சதாசிவம், CREDAI சென்னை தலைவர் மெஹுல் எச்.தோஷி, பொருளாளர் விஸ்வஜீத் குமார், CREDAI திருச்சி சேர்மன் ஆர்.எஸ்.ரவி, பிரசிடெண்ட் ஆர்.மனோகரன், CREDAI மதுரை செயலாளர் யோகேஷ் திருகோன்டா, CREDAI ஈரோடு தலைவர் எம். டி. ஈஸ்வரன், CREDAI திருநெல்வேலி தலைவர் எஸ்.ஆர்.சிவகுமார் தாஸ், CREDAI ஓசூர் செயலாளர் பி.ஆர்.ஜெய் பிரகாஷ், CREDAI தருமபுரி இணைச் செயலாளர் ஆர்.சரவணன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் முதல் முறையாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் நடுத்தர மக்கள் இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு உடனடியாக ஒற்றைச் சாளர முறையில் கட்டட அனுமதிகளைப் பெறும் ஒருங்கிணைந்த புதிய திட்டத்தை தொடங்கி வைத்தமைக்காக நன்றி தெரிவித்தனர். இந்த நிகழ்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை மண்டலத்திற்குட்பட்ட

# வெள்ளத் தடுப்புப் பணிகள் - வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாட்டுப் பணிகள்!

## விரைந்து முடித்திட - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உத்தரவு!

சென்னை, ஆக.1-

நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (30-07-2024) சென்னை தலைமைச் செயலகத் தில், சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 13 மாவட்டங்களில் நடை பெற்று வரும் பணிகள் குறித்து, சென்னை மண்டல பொறியாளர்க ளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப் பட்டது.



இந்த ஆய்வுக்கூட்டத்தில், ரூ.700 கோடி மதிப்பீட்டில் நடை பெறும் வெள்ளத் தடுப்பு திட்டங்கள் மற்றும் ரூ.35 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் வடகிழக்குப் பருவம ழைக்கு முந்தைய தூர்வாரும் பணிகள் மற்றும் RRR திட்டத்தின் கீழ் (செப்பனிடுதல், புதுப்பித்தல், புனரமைத்தல்) ரூ.100 கோடி மதிப் பீட்டில் நடைபெறும் ஏரிகள் புனர மைப்பு பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

சென்னை, காஞ்சிபுரம், செங் கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் வெள்ளத் தடுப்புப் பணிகள் மற்றும் தூர்வாரும் பணி கள் அனைத்தையும் வடகிழக்குப் பருவமழைக்கு முன்பு விரைந்து முடிக்க நீர்வளத்துறை அமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டது.

இக்கூட்டத்தில், கூடுதல் தலை மைச் செயலாளர் டாக்டர் க.மணி வாசன், கூடுதல் செயலாளர் எஸ். மலர்விழி, எஸ்.மன்மதன், முதன்மை தலைமைப் பொறியா ளர் (முழு கூடுதல் பொறுப்பு) மற் றும் தலைமைப் பொறியாளர் (பொது), கண்காணிப்புப் பொறி யாளர்கள் மற்றும் அனைத்து நீர் வளத்துறை செயற்பொறியாளர் களும் கலந்து கொண்டனர்.

### சேலம் மாவட்டம் - தலைவாசலில் கால்நடை - விலங்கின அறிவியலுக்கான

# ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிலையம் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்!

## எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டிற்கு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பதில்!

*சேலம், ஆக.1-*

*சேலம் மாவட்டம், தலைவாசலில் உள்ள கால்நடை மற்றும் விலங் கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிலையத்தை விரைவில் செயல்பாட்டுக்குக் கொண்டுவர தீவிர நடவ டிக்கை மேற்கொள்ளப் பட்டு பயன்பாட்டிற்கு வரும் என்று மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*சட்டமன்ற எதிர்க்கட் சித் தலைவர், அவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது, சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்ரோட்டில் தொடங் கப் பட்ட கால்நடைப் பூங்கா இன்னும் பயன் பாட்டுக்குக் கொண்டுவ ரப்படவில்லை என குற் றச்சாட்டுக்களை கூறியி ருக்கிறார். இந்நிலையத் தின் தற்போதைய நிலை குறித்து சில விவரங் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*சேலம் மாவட்டம், தலைவாசலில் அமைந் துள்ள கால்நடை பராம ரிப்பு துறைக்குச் சொந்த மான 1866.28 ஏக்கர் பரப்பில் ஒருங்கிணைந்த பல்துறை பல்நோக்குடன் கூடிய உலகத் தரம் வாய்ந்த கால்நடை மற் றும் விலங்கின அறிவிய லுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம் ரூ.564.44 கோடி திட்ட முதலீட்டில் அமைக்க 2019 ம் ஆண்டில் திட்ட மிடப்பட்டது.*

*இந்த ஆராய்ச்சி நிலை யத்தில் கால்நடைப் பண்ணை வளாகம், மீன் வள செயல்முறை வளா கம், முதுநிலைக் கல்வி/ பட்ட மேற்படிப்பு வளா கம், விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளா கம், ஆராய்ச்சி வளாகம், தொழில் உருவாக்கம் மற் றும் ஒருங்கிணைப்பு வளாகம், இறைச்சி உற் பத்தி மற்றும் பதப்படுத்து தல் வளாகம், பசுந்தீவன ஆராய்ச்சி மண்டலம், பொதுமக்கள் கலந்துரை யாடும் பகுதி ஆகிய 9 வளாகங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டு கடந்த 2019 ஆம் ஆண்டு அர சாணை எண். 187, கால் நடை பராமரிப்பு, பால்வ ளம், மீன்வளம் - மீனவர் நலத்துறை (காப2), நாள் 30.12.2019 -ன் வழியாக ஆணையிடப்பட்டது.*

*இவ்வாராய்ச்சி நிலை யத்திற்கென 110/22 கிவோ துணை மின் நிலை யம் ரூ.28.50 கோடி மதிப் பீட்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மா னக் கழகம் மூலமாகவும் ஆராய்ச்சி நிலையத்தின் தேவைக்கான குடிநீர் வழங்க சிறப்பு குடிநீர் வழங்கல் திட்டம் ரூ.262.16 கோடி மதிப் பீட்டில் தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த உத் தேசிக்கப்பட்டது. ஆராய்ச்சி நிலையத்தின் கட்டமைப்பு வசதிகள் சம்மந்தப்பட்ட அரசுத் துறைகள் மற்றும் நிறுவ னங்கள் மூலம் மேற் கொள்ளப்பட்டன.*

**அ.தி.மு.க. ஆட்சியில் சரியான திட்டமிடல் இல்லை!**

*இந்நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப்பணி கள், குடிநீர் வழங்கும் பணிகள், திட்ட மிடப் பட்ட 9 வளாகங்களின் கட்டுமானம் மற்றும் மின் இணைப்பு பணிகள் ஆகி யவற்றில் 2021ல் கழக ஆட்சி பொறுப்பேற்ற போது 50 சதவிகித பணி கள் கூட முடிவடையாத நிலையே இருந்தது.*

*உலகத் தரத்தில் உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் இடம் அதற்கு ஏற்ற இடம் தானா என்பது குறித்த ஆராய்ச்சி முதலில் நடை பெற்றிருக்க வேண்டும். சரியான திட்டமிடல் இருந்திருந்தால் எதிர்க் கட்சித்தலைவர் குறிப் பிட்ட காலதாமதத்தை தவிர்த்திருக்கலாம். அவர் கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது, சரியான திட்டமிடுதல் இல்லாமல், அவசரகதியில், மக்களின் வரிப்பணத்தில் அதிக பொருட்செலவில் இந்நி லையத்தைத் தொடங்கி யுள்ளார்கள். கால்நடைப் பராமரிப்பு என்பது அதிக அளவில் தண்ணீர் தேவை யுடைய தொழிலாகும். தினசரி 11 மில்லியன் லிட் டர் தண்ணீர் தேவைப் படும் ஒரு நிலையத்தை நீராதாரமே இல்லாத இடத்தில் அமைத்தது எந்த வகையான திட்ட மிடல்எனத் தெரியவில்லை.*

**எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்!**

*எனினும், கடந்த 07.05.2021 ல் முதலமைச் சர் அவர்களின் தலைமை யில் கழக ஆட்சி அமைந்த பிறகு இந்நிலையத்தை சீரிய முறையில் கட்ட மைத்து கால்நடை வளர்ப்போர் உண்மை யான பயன் பெறும் வகை யில் கீழ்கண்ட நடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டன.*

*1. இந்நிலையத்தின் செயல்பாடுகளைக் கண் காணித்து வழிநடத்தும் பொருட்டு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு தலைமைச் செயலாள ரைத் துணைத் தலைவரா கவும் கொண்ட திட்ட கண்காணிப்புக் குழு ஏற்ப டுத்தப்பட்டுள்ளது.*

*2. கால்நடை மருத் துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் கல்லூரி முதல் வர் நிலையில் இயக்குநர் பதவி நிர்ணயம் செய்யப் பட்டு நிரப்பப்பட்டுள்ளது.*

*3. மின்சார வாரி யத்தின் மூலம் நடை பெற்று வந்த உயர் மின் அழுத்த கம்பிகள் பொருத்தும் பணி முடிக் கப்பட்டுள்ளது.*

*4. டான்சி நிறுவ னம் மூலம் அறையணிகள் கொள்முதல் முடிக்கப் பட்டு அவற்றை பொருத் தும் பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.*

*5. இந்நிலையத் திற்கு. முதற்கட்டமாக தேவைப்படும் பணியி டங்களை தமிழ்நாடு கால் நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழ கம், தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம், அண் ணாமலைப் பல்கலைக் கழகம், கால்நடை பராம ரிப்புத் துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை போன்ற அரசு துறைகள் மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகிறது.*

*கடந்த 2021ஆம் ஆண் டில் ஏற்பட்ட கொரோனா நோய்த் தொற்று, 2023ஆம் ஆண்டு, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ்நாட் டில் பல மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப் புகள், மக்களவை தேர் தல் ஆகியவை காரண மாக ஜனவரி 2024லில் முடிக்கப்படவேண்டிய பணிகள் சிறிது தாமத மாக முடிக்கப்பட்டு வரு கின்றன.*

**மூன்று மாதங்களில் பயன்பாட்டிற்கு வரும்!**

*அனைத்துப் பணிகளை யும் விரைந்து முடிக்க முத லமைச்சர் அவர்கள் அறி வுறுத்தியதைத் தொடர்ந்து அனைத்துப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள் ளன. இதன் காரணமாக இன்னும் இரண்டு அல் லது மூன்று மாதங்களுக் குள் அனைத்துப் பணி களும் முடிக்கப்பட்டு நிலையம் பயன்பாட்டுக் குக் கொண்டுவரப்படும்.*

*அனைத்துத் தரப்பு மக் களுக்கும் நன்மை பயக் கும் எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் முதலமைச் சர் அவர்களின் சீரிய தலைமையிலான கழக அரசு அத்திட்டத்திற்கு ஆதரவினை அளித்து தொடர்ந்து செயல் படுத்தி வருகிறது. சரி யான திட்டமிடல் இல் லாமலும் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமலும் கடந்த ஆட்சியில் பல குழப்பங்களுடன் ஏற்ப டுத்தப்படவிருந்த கிளா ம்பாக்கம் பேருந்து நிலை யத்தில் அனைத்து குழப் பங்களும் நிவர்த்தி செய் யப்பட்டு அனைவரும் பயன்பெறும் பேருந்து நிலையமாக உலகத்தரத் தில் மாற்றியமைத்தது போல கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக் கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிலையமும் விரைவில் பயன்பாட் டுக்கு கொண்டு வரப்படும்.*

*இவ்வாறு மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்கள்.*



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 திட்டத்தின் 143ஆவது தொகுதியாக அறந் தாங்கி சட்டமன்றத் தொகுதியில் ஆய்வு மேற்கொண்டார். ராமச்சந்திரன் அவர்களின் அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டார். பள்ளியில் நடைபெற்ற PreSMC கூட்டத்தில் பங்கேற்று பெற்றோர்களுடன் கலந்துரையாடினார்.